செ.வெ.எண்-32 நாள்-29.05.2020

## அரியலூர் மாவட்டம்
## பள்ளிக்கல்வித் துறையின் மூலம் ரூ.7.50 கோடி மதிப்பிலான கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு.

அரியலூர் மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ரூ.7.50 கோடி மதிப்பிலான கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி.கே.பழனிசாமி** அவர்கள் தலைமைச்செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி மூலம் இன்று திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள, கோவிந்தபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.96 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடத்தில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் குத்துவிளக்கேற்றி இனிப்புகள் வழங்கி, பார்வையிட்டார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, மாணவர்களின் நலன் கருதி பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகள், மிதிவண்டிகள், சீருடைகள், விலையில்லா நோட்டு, புத்தகங்கள் போன்ற 14 வகையான விலையில்லா பொருட்களை வழங்கி வருகிறார்கள்.

ஏழை மாணவர்கள் பள்ளி படிப்பை பாதியில் நிறுத்திவிடக்கூடாது என்பதற்காக இடைநிற்றலை தவிர்க்கும் வகையில் ஊக்கத்தொகை வழங்கி வருகிறார்கள். மேலும், பள்ளி மாணவர்கள் சிரமமின்றி கல்வி கற்பதற்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும், தங்கள் திறமையை வளர்த்துக்கொள்வதற்கு ஆய்வகங்களும் போன்ற பல்வேறு திட்டங்களை மாணவர்கள் பயன்பாட்டிற்காக செயல்படுத்தி வருகிறார்கள்.

இன்று நம் அரியலூர் மாவட்டத்தில் கோவிந்தபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.96 இலட்சம் மதிப்பிலும், செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.2 கோடியே 90 இலட்சம் மதிப்பிலும், த.கீழவெளி அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.2 கோடியே 13 இலட்சம் மதிப்பிலும், சோழன்குடிகாடு அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.1 கோடியே 51 இலட்சம் மதிப்பிலும் ஆகமொத்தம் ரூ.7 கோடியே 50 இலட்சம் மதிப்பில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்துள்ளார்கள்.

மாணவ, மாணவிகள் தமிழக அரசு ஏற்படுத்தி தரும் இந்த வாய்ப்புகளை பயன்படுத்தி சிறந்த முறையில் கல்வி கற்று உலகின் தலை சிறந்த வல்லுநர்களாக திகழ வேண்டும் என வாழ்த்துகிறேன் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முத்துகிருஷ்ணன், வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன், வாட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா, சிவாஜி, முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் காமராஜ், தலைமையாசிரியர், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மற்றும் ஆசிரியர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**